ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிறப்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

1. திருவிவிலியத்தின் கிரேக்கப் பிரதியை 'வல்கேட்' என்னும் பெயரில் இலத்தீன் மொழிபெயர்ப்புச் செய்தவர்
   (1) தூய எரோம் (2) தூய யோவான் (3) தூய கிளெமெண்ட்
   (4) தூய அகுஸ்தீனு (5) தூய மத்தேயு

2. பஞ்சாகமத்தில் அடங்கும் நூல்கள்
   (1) தொடக்கநூல், விடுதலைப் பயணம், தூய பவுலின் திருமுகங்கள், எண்ணிக்கை, இணைச்சட்டம்
   (2) மத்தேயு நற்செய்தி, மாற்கு நற்செய்தி, லூக்கா நற்செய்தி, யோவான் நற்செய்தி, திருவெளிப்பாடு
   (3) தொடக்கநூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம்
   (4) தொடக்கநூல், விடுதலைப் பயணம், இறைவாக்கினர், லேவியர், எண்ணிக்கை
   (5) தொடக்கநூல், விடுதலைப் பயணம், திருவெளிப்பாடு, லேவியர், எண்ணிக்கை

3. பழைமை வாய்ந்த நூலாகத் திருவிவிலியம் அறிமுகம் செய்யப்படுவதற்கான காரணம் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள,
   (1) கீழைத்தேய இலக்கிய அம்சமாகும்.
   (2) கீழைத்தேயத்திற்குரிய விடயங்களாகும்.
   (3) பழைய மொழிகளின் கருத்துகளும் காட்சிகளுமாகும்.
   (4) வரலாற்றுக் கதைகளும் காட்சிகளுமாகும்.
   (5) அரசியல் செய்திகளாகும்.

4. திருவிவிலியத்தின் பிரதான கருப்பொருள்,
   (1) கிறிஸ்து இயேசு (2) சீனாய் உடன்படிக்கை (3) மோசே
   (4) புனித மரியாள் (5) திருச்சபை

5. பின்வருவனவற்றுள் 'எழுதும் இறை ஏவுதல்' என்பதற்கு உதாரணமாகக் கொள்ளக்கூடிய வசனம் எது ?
   (1) "உன் வாயில் நான் வைத்துள்ள என் வார்த்தைகளும் ............ நீங்கிவிடாது." (எசாயா 59:21)
   (2) "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்கு." (2 பேதுரு 1:21)
   (3) "நீங்கள் பேசவேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்." (லூக்கா 12:12)
   (4) "அவருக்குத் தம் தூய ஆவியை அருளியவர் எங்கே?" (எசாயா 63:11)
   (5) "நான் உனக்குச் சொல்லியிருக்கும் சொற்களை எல்லாம் ஏட்டுச் சுருளில் எழுதிவை." (எரேமியா 30:2)

6. சேத்துவின் பிறப்பின் வழியாக இடம்பெற்ற ஒரு நன்மை,
   (1) ஆபிரகாம் ஒரு தேசத்திற்கு உரிமையாளரானார்.
   (2) காயின், ஆபேலின் இழந்துபோன சகோதரத்துவம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.
   (3) புதியதொரு பரம்பரை உருவாகியது.
   (4) காயினின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டது.
   (5) முழு உலக மாந்தருக்கும் ஆசீராக அமைந்தது.

7. ஆபிரகாமின் அழைப்பின் இரண்டு முக்கிய அம்சங்கள்
   (1) நம்பிக்கை, அன்பு (2) தியாகம், சவால் (3) தியாகம், அன்பு
   (4) தியாகம், எதிர்நோக்கு (5) நம்பிக்கை, எதிர்நோக்கு

[பக். 2 ஐப் பார்க்க

8. யாக்கோபு தனது மூத்த சகோதரனுக்கு உணவைக் கொடுத்து அவரது மூத்த பிள்ளைக்குரிய உரிமையைப் பெற்றுக்கொண்டதிலிருந்து வெளிப்படுவது,
(1) வஞ்சித்து இறை ஆசீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது ஆகும்.
(2) இஸ்ரயேல் இனத்தை விட ஏதோம் இனம் முதன்மையானது என்பது ஆகும்.
(3) ஏதோம் இனத்தை விட இஸ்ரயேல் இனம் மேலானது என்பது ஆகும்.
(4) இறைவனின் வாக்குறுதி மனித பரம்பரை வழிமுறையாக இடம்பெற மாட்டாது என்பது ஆகும்.
(5) இறை திட்டத்தை மீறி மனிதனால் செயற்பட முடியும் என்பது ஆகும்.

9. யாக்கோபு 'இஸ்ரயேல்' என்ற பெயரைப் பெற்றது,
(1) யோசேப்புவின் பிறப்பின் பின்னர் ஆகும். (2) எகிப்தில் யோசேப்பைச் சந்தித்த பின்னர் ஆகும்.
(3) அவரின் பிறப்பின்போது ஆகும். (4) ஏசாவோடு ஒற்றுமையானபோது ஆகும்.
(5) அறியாத ஆடவரோடு போராடிய பின்னர் ஆகும்.

10. "உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பரவிச் செல்வாய்." இவ்வாறு இறைவன் வெளிப்படுத்தியது
(1) ஆபிரகாமுக்கு (2) மோசேக்கு (3) நோவாவிற்கு
(4) யாக்கோபுவிற்கு (5) ஈசாக்கிற்கு

11. வாக்குப்பண்ணப்பட்ட பூமிக்குச் சென்ற பயணத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு நீர் கிடைத்த இரண்டு இடங்கள்
(1) தீர, சீதோன் (2) யோர்தான், சமாரியா
(3) பெயர்சேபா, சீதோன் (4) தீர, யோர்தான்
(5) மாரா, மாசா மெரிபா

12. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு காட்சிகளுள் இறைவாக்கினர் எரேமியா கண்ட காட்சி எது ?
(1) புதுமையான உயிரினம் (2) சேராபீன்கள்
(3) உலர்ந்த எலும்புகள் (4) மாட்சிமிகு இறைகாட்சி
(5) அத்திப் பழங்கள் நிறைந்த இரண்டு கூடைகள்

13. எசாயா இறைவாக்கினரின் பெயரின் பொருள் என்ன ?
(1) இறைவன் எம்மோடு. (2) யாவே உயர்த்துகிறார்.
(3) இறைவன் பலப்படுத்துகிறார். (4) யாவே மீட்பராக இருக்கிறார்.
(5) அபிஷேகம் செய்யப்பட்டவர்.

14. இறைவாக்கினர் எசக்கியேல் உலர்ந்த எலும்புகளைக் கொண்ட பள்ளத்தாக்குக் காட்சியின் மூலம் எடுத்துக்காட்டியது,
(1) பள்ளத்தாக்கில் எலும்புகள் சிதறிக் கிடந்தன என்பதனை ஆகும்.
(2) இஸ்ரயேலருக்குப் புதிய எதிர்நோக்கு ஒன்றினை இறைவன் அருளுகிறார் என்பதனை ஆகும்.
(3) இஸ்ரயேல் இனம் அழிந்துபோயுள்ளது என்பதனை ஆகும்.
(4) எதுவித மனநிலைப் பண்புகளும் அவற்றில் காணப்படவில்லை என்பதனை ஆகும்.
(5) எலும்புகள் முற்றாக உலர்ந்து இருந்தன என்பதனை ஆகும்.

15. இறைவாக்கினர் எசாயா பபிலோனியாவின் அழிவை ஒப்பிட்டிருப்பது,
(1) பாழ் நிலத்திற்கு (2) கல்லறைக்கு
(3) வரண்ட நிலத்திற்கு (4) சேறும் சகதியும் நிறைந்த நிலத்திற்கு
(5) சமவெளிக்கு

16. மேன்மையான இறைவனை ஆயனாகவும் இஸ்ரயேல் மக்களை அவரது மந்தைகளாகவும் எடுத்துக்காட்டிய இறைவாக்கினர்
(1) எசாயா (2) ஓசேயா (3) தானியேல் (4) ஆமோஸ் (5) எரேமியா

17. யூதமக்கள் நாடு கடத்தப்பட்டிருந்தபோது அவர்களால் ஆலயத்திற்குச் செல்லமுடியாத நிலையில், அவர்கள் அமைத்துக்கொண்ட சமய வழிபாட்டுத்தலம்
(1) தலைமைச் சங்கம் (2) சினகொக் (3) பலிபீடம் (4) சட்டபீடம் (5) நீதிமன்றம்

18. கிறிஸ்துவின் காலத்தில் யூதமக்கள் மத்தியிலிருந்து பிரிந்து, தம்மை ஒரு விசேட குழுவாகக் கருதிக்கொண்டு, சமயச் சடங்குகளிலும் வழிபாடுகளிலும் மட்டும் கவனம் செலுத்திய குழுவினர்
(1) சதுசேயர் (2) ஏரோதியர் (3) பரிசேயர் (4) எசேனியர் (5) சமாரியர்

19. இயேசு உயிர் துறந்தபோது, "இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" எனக் கூறியவர் யார் ?
(1) நூற்றுவர் தலைவர் (2) இடப்பக்கக் கள்வன்
(3) அரிமத்தியா யோசேப்பு (4) வலப்பக்கக் கள்வன்
(5) திருத்தூதர் யோவான்

[பக். 3 ஐப் பார்க்க

**20.** தூய மத்தேயு நற்செய்தியின்படி இறை அரசில் நுழையத் தேவையான ஓர் அடிப்படைத் தகுதி,
(1) இறைவனுக்கும் மனிதனுக்கும் பணிபுரிதல் ஆகும்.
(2) நன்நெறியில் பரிசேயரின் நெறியை விடச் சிறந்திருத்தல் ஆகும்.
(3) திருச்சபையின் படிப்பினைகளைப் பின்பற்றுதல் ஆகும்.
(4) திருமுழுக்குப் பெறுதல் ஆகும்.
(5) நீதியுடைமையும் நேர்மையும் உடையவராய் இருத்தல் ஆகும்.

**21.** திருவிவிலிய அறிஞர் புல்ட்மான் கூறுவதன்படி இயேசுவின் வாழ்வைப் பற்றிய தகவல்களில் மறுக்கமுடியாத உண்மை,
(1) இறைவன் இரக்கம் உள்ள தந்தை என அறிவித்தார் என்பது ஆகும்.
(2) முழு உலகத்திற்கும் மீட்பை அறிவித்தார் என்பது ஆகும்.
(3) இறை அரசை அறிவித்தார் என்பது ஆகும்.
(4) சீடத்துவம் பற்றி அறிவித்தார் என்பது ஆகும்.
(5) பாவத்திலிருந்து மீட்படைதல் பற்றி அறிவித்தார் என்பது ஆகும்.

**22.** யூதாஸ் தம்மைக் கூட்டிக்கொடுப்பது பற்றியும், தூய பேதுரு தம்மை மறுதலிப்பது பற்றியும் இயேசு முன் அறிவித்ததிலிருந்து விளங்கிக்கொள்வது,
(1) இறை திட்டத்தை நிறைவேற்ற சுய விருப்பத்துடன் முன்வருகிறார் என்பதனை ஆகும்.
(2) இவர்கள் இருவரும் என்றாவது ஒருநாள் அவருக்குத் துரோகம் செய்வார்கள் என்பதனை ஆகும்.
(3) இவர்கள் இருவரதும் மறுதலிப்பு தற்செயலாக இடம்பெற்ற செயல் அல்ல என்பதனை ஆகும்.
(4) பேதுரு, யூதாஸ் ஆகிய இருவரும் முழு ஆயத்தத்தோடு இருந்தார்கள் என்பதனை ஆகும்.
(5) இவர்கள் இருவரும் இயேசுவுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்பதனை ஆகும்.

**23.** இறை அரசையிட்டுத் தலைமைத்துவம் என்பது
(1) தியாகம் செய்தல் (2) புளிக்காரம் ஆகுதல் (3) சீடத்துவம் வகித்தல்
(4) பணி புரிதல் (5) எஜமான் ஆகுதல்

**24.** 'மறுபிறப்பு, உயிர்த்தெழுதல்' என்னும் கொள்கைகள் பற்றிய விளக்கத்தில், 'உயிர்த்தெழுதல்' என்பதன் மூலம் கருதப்படுவது
(1) ஒரு காலத்தில் பிறத்தல் (2) விண்ணுலக இன்பத்தை உரிமையாக்கிக் கொள்ளுதல்
(3) அனைத்தினதும் முடிவு (4) முற்பிறப்புடன் தொடர்புபடுதல்
(5) மீண்டும் மீண்டும் பிறத்தல்

**25.** யோவான் 3:5-6 இன்படி, இயேசு நிக்கதேமுவுடன் நடந்த உரையாடலில் திருமுழுக்குப் பற்றிக் கொடுத்த விளக்கம் என்ன ?
(1) பாவ மன்னிப்பின் மூலம் கிடைக்கும் ஒரு பிறப்பாகும்.
(2) அந்நியோன்னிய தொடர்பின் ஒரு வாழ்வாகும்.
(3) தூய ஆவியின் மூலம் கிடைக்கும் ஒரு புதுப் பிறப்பாகும்.
(4) ஆன்மீக உயிர் தரும் ஓர் ஊற்றாகும்.
(5) உயிர்ப்பின் ஓர் அடையாளமாகும்.

**26.** பொதுச் சங்கம் ஒன்றைக் கூட்டுவது, அதனை நடாத்துவது, அனுமதிப்பது என்னும் பணிகளுக்குப் பொறுப்பாய் இருந்தவர்
(1) உரோமை ஆளுநர் (2) திருத்தந்தையின் செயலாளர் (3) கருதினால்மார்
(4) வத்திக்கான் பிரதிநிதி (5) திருத்தந்தை

**27.** பிற இனத்தார் திருச்சபையில் சேர்வதற்கு ஏதுவாய் அமைந்த பிரதான காரணம்,
(1) நூற்றுவர் தலைவனான கொர்னேலியுவின் மனமாற்றம்.
(2) பெந்தக்கோஸ்து திருவிழா.
(3) கிறிஸ்து இயேசுவில் கொண்ட நம்பிக்கை.
(4) யூத சடங்கு முறைகளினதும் சட்டங்களினதும் தாக்கம்.
(5) பழைய யூத மத அனுட்டானங்கள்.

**28.** ஆரம்ப காலத்தில் திருத்தொண்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பிரதான பணி
(1) நற்செய்தியை எடுத்துரைத்தலும் திருமுழுக்கு அளித்தலும்
(2) நற்செய்தியை எடுத்துரைத்தலும் திருவழிபாட்டை நடாத்துதலும்
(3) அதிசயத்திற்குரியவற்றைச் செய்தலும் நோய்களைக் குணமாக்குதலும்
(4) சபைகளை நிறுவுதலும் நம்பிக்கைக்குள் வாழ்க்கை நடாத்துதலும்
(5) பந்தியில் பரிமாறுதலும் அறப்பணிகளில் ஈடுபடுதலும்

**29.** திருச்சபையின் பொதுச்சங்கங்களில் முதற் சங்கமாக இருப்பது,
(1) எபேசு பொதுச்சங்கம் (2) திரிதெந்தீன் பொதுச்சங்கம்
(3) எருசலேம் பொதுச்சங்கம் (4) முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம்
(5) நிசேயா பொதுச்சங்கம்

[பக். 4 ஐப் பார்க்க

1744

**30.** தூய பவுலின் இரண்டாம் மறைதூதுப் பயணத்தில் அவருடன் கலந்து கொண்டவர்கள்
(1) பர்னபா, யோவான், சீலா
(2) சீலா, திமோத்தேயு, லூக்கா
(3) யோவான், சீலா, லூக்கா
(4) திமோத்தேயு, பர்னபா, யோவான்
(5) பிலிப்பு, திமோத்தேயு, லூக்கா

**31.** திருச்சபை வரலாற்றில் 'வீரவரலாற்றுக்காலம்' எனக் குறிப்பிடப்படுவது
(1) முதலாம் நூற்றாண்டு
(2) இரண்டாம் நூற்றாண்டு
(3) மூன்றாம் நூற்றாண்டு
(4) முதல் இரண்டு நூற்றாண்டுகள்
(5) முதல் மூன்று நூற்றாண்டுகள்

**32.** 'காரிஸ்மா' என்ற சொல்லின் கருத்து,
(1) 'திருச்சபைக்குள் இருக்கும் இறை செயற்பாடு' என்பதாகும்.
(2) 'தூய ஆவியானவரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் விசேட அருட்கொடை' என்பதாகும்.
(3) 'கிறிஸ்து இயேசுவின் மனிதாவதாரம்' என்பதாகும்.
(4) 'இறைவனைச் சார்ந்த பிரதான வலு சக்தி' என்பதாகும்.
(5) 'இறைவன் மட்டில் மனிதனிடத்திலிருக்கும் நம்பிக்கை' என்பதாகும்.

**33.** தூய ஜெரோம் கிறிஸ்தவ எழுத்தாளர் ஆவதுடன், திருச்சபைத் தந்தையும் கிறிஸ்தவ தத்துவவியலாளருமாகக் குறிப்பிடத்தக்கவர். யார் ?
(1) தூய தேர்த்தூலியன்
(2) தூய சிறில்
(3) தூய அகஸ்டின்
(4) தூய ஜஸ்டின்
(5) தூய பெக்கோமியஸ்

**34.** கி.பி. 1073 முதல் 1083 வரை காலப்பகுதியில் லௌகீக, அரசியல் இயக்கங்களிலிருந்து திருச்சபையை விடுவித்துக் கொள்வதற்கு மிக ஊக்கத்துடன் செயற்பட்ட திருத்தந்தை
(1) திருத்தந்தை XII வது ஜோண்
(2) திருத்தந்தை II வது சில்வெஸ்டர்
(3) திருத்தந்தை VII வது பெனடிக்ற்
(4) திருத்தந்தை VII வது கிறகோறி
(5) திருத்தந்தை VIII வது பத்திநாதர்

**35.** "மறை சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் விதையாகும்" எனக் கூறியவர்
(1) தூய தேர்த்தூலியன்
(2) கொன்ஸ்தாந்தின் பேரரசன்
(3) தூய எயுசேபியுஸ்
(4) தூய அத்தனாசியார்
(5) அலெக்சாந்திரியாவின் ஆயர்

**36.** 8ஆம் நூற்றாண்டில் ஜெர்மனிய திருத்தூதர் என விருது பெற்றவர்
(1) தூய பற்றிக்
(2) தூய போனிபஸ்
(3) தூய பெனடிக்
(4) தூய றொமோல்ட்
(5) தூய புருனோ

**37.** இயுத்திக்கசின் பேதகத்திற்கு மறுப்புத் தெரிவித்த பொதுச்சங்கம் எது ?
(1) கல்சிடோன்
(2) எருசலேம்
(3) நிசேயா
(4) திரிதெந்தீன்
(5) வத்திக்கான்

**38.** 'இலத்திரன் ஒப்பந்தம்' என அழைக்கப்படுவது,
(1) கொன்ஸ்தாந்தின் அரசனுக்கும் திருத்தந்தைக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட நிலபுலன் தொடர்பான ஒப்பந்தம் ஆகும்.
(2) திருச்சபையின் பரம்பரை உடைமைகளை அரசுக்குப் பொறுப்பளித்தல் தொடர்பான ஒப்பந்தம் ஆகும்.
(3) கத்தோலிக்கக் கல்வியை இத்தாலி அரசுக்குப் பொறுப்பளித்தல் தொடர்பான ஒப்பந்தம் ஆகும்.
(4) கத்தோலிக்கர்கள் ஜெர்மனியில் குடியிருப்பதை உறுதிப்படுத்தும் ஒப்பந்தம் ஆகும்.
(5) வத்திக்கான் ஒரு தனி நாடாகவும் நடுநிலை நாடாகவும் அதன் மன்னர் திருத்தந்தை எனவும் உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும்.

**39.** புனித அவிலா தெரேசாள் எழுதிய இரு ஆன்மீக நூல்களாவன,
(1) 'தன்னிலை ஏற்பு', 'இறைவனின் நகரம்'
(2) 'உதய தாரகை', 'இருண்ட இரவு'
(3) 'நிறைவாழ்வின் வழி', 'உள்ளக மாளிகை'
(4) 'ஆன்மீகப் பாடல்', 'இனிமைமிகு பாடல்'
(5) 'ஹெகசப்லா', 'அன்பின் அணையாச் சுவாலை'

**40.** பத்தாம் நூற்றாண்டில் திருச்சபையில் உருவாகிய புத்துணர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தது,
(1) பேரரசின் ஆட்சி அதிகாரமாகும்.
(2) பிரான்சில் உருவான துறவற வாழ்க்கை முறையாகும்.
(3) ஆயர்களினதும் அரச குமாரர்களினதும் வாழ்க்கை முறையாகும்.
(4) திருச்சபைத் தலைவர்களின் ஊக்கமாகும்.
(5) பொது நிலையினரைத் திருச்சபையின் பதவிகளுக்கு நியமித்தமையாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**41.** ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் நிலவிய மூவகைப் பாடசாலைகளுமாவன
(1) பிரிவெனாப் பாடசாலைகள், செமினரிப் பாடசாலைகள், அரச பாடசாலைகள்
(2) நன்கொடைப் பாடசாலைகள், அரச பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள்
(3) மறைப் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள், செமினரிப் பாடசாலைகள்
(4) அரச பாடசாலைகள், மிஷன் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள்
(5) பெண்கள் பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள், அரச பாடசாலைகள்

**42.** மெய்யியல், இறையியலின் ஆரம்பமும், இறையியலைக் கற்பிப்பதற்கான பாடசாலைகளின் ஆரம்பமும் இடம்பெற்றது,
(1) எட்டாம் நூற்றாண்டில் ஆகும். (2) ஒன்பதாம் நூற்றாண்டில் ஆகும்.
(3) பத்தாம் நூற்றாண்டில் ஆகும். (4) பதினோராம் நூற்றாண்டில் ஆகும்.
(5) பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆகும்.

**43.** முத்திப்பேறு பெற்ற யோசப்வாஸ் அடிகளார் 1685 இல் கனராவில் பணியை முடித்துக்கொண்டு மீண்டும் கோவாவிற்கு வந்து, இந்திய ஒறத்தோரியன் குருத்துவ சபையின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது,
(1) இலங்கைக்கு வருவதற்கான பொருத்தமான ஒரு வழியைத் தேடிக் கொள்வதற்கு ஆகும்.
(2) ஒறத்தோரியன் சபைக்குத் தமது சேவை மேலும் தேவைப்பட்டமையினால் ஆகும்.
(3) மற்றுமோர் பிரதேசாதிபதி கனரா பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டமையினால் ஆகும்.
(4) தமது பிறந்த ஊரில் பணிபுரிவதற்கான அழைப்பு கிடைத்தமை ஆகும்.
(5) ஒறத்தோரியன் சபையின் பொறுப்பு தமக்குத் தரப்பட்டமை ஆகும்.

**44.** திருப்பலியில் இடம்பெறும் இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என்பன பெற்றுக்கொள்ளப்பட்டது
(1) யூத மரபில் (2) கிரேக்க மரபில் (3) அம்புறோசியன் மரபில்
(4) கலிக்கான் மரபில் (5) கொன்ஸ்தாந்தின் மரபில்

**45.** இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருமுழுக்குப் பற்றி எழுதப்பட்டுள்ள நூல் எது ?
(1) திருத்தூதரின் மரபு (2) திருத்தூதர் பணி (3) திருத்தூதரின் படிப்பினைகள்
(4) திருத்தூதர்களின் முறை (5) திருத்தூதர்களின் பதில்

**46.** தூய தோமஸ் அக்குவைனஸ் என்னும் மிகப் பெரிய இறையியலாளர் கிறிஸ்து இயேசுவைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது,
(1) முழுமுதல் அருளடையாளம் என்றாகும். (2) நிகரற்ற அருளடையாளம் என்றாகும்.
(3) உண்மையின் ஊற்று என்றாகும். (4) அருளடையாளங்களின் அருளடையாளம் என்றாகும்.
(5) அடிப்படை அருளடையாளம் என்றாகும்.

**47.** 1869 இல் கொழும்பில் திருத்தூதரக மறைமாவட்ட ஆயரான மேதகு சில்லானி ஆண்டகையின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த துறவிகள் சபை
(1) புனித மரியாளின் பிரான்சிஸ்கன் சகோதரிகள்
(2) ஏழைகளின் சிறிய சகோதரிகள்
(3) பிரான்சின் நல்லாயன் சபைச் சகோதரிகள்
(4) அப்போஸ்தலிக்க சபையின் துறவற சகோதரிகள்
(5) அன்பின் சகோதரிகள்

**48.** மாற்கு, மத்தேயு ஆகிய நற்செய்திகளில் இயேசு அப்பம், இரசம் என்பவற்றின் மீது ஆசி கூறுவது பற்றிக் குறிப்பிடப்படுகின்ற மரபு,
(1) பலஸ்தீன மரபாகும். (2) இஸ்ரயேல் மரபாகும். (3) யூத மரபாகும்.
(4) அலெக்சாந்திரியா மரபாகும். (5) குரு மரபாகும்.

**49.** கிறிஸ்தவம் அல்லாத பிற மறைகள் பற்றித் திருச்சபை உருவாக்கிக் கொள்ள வேண்டிய நல்ல மனப்பாங்குகள் தொடர்பாக திருச்சபையைச் சிந்திக்கத் தூண்டியது,
(1) எபேசு பொதுச்சங்கம் (2) எருசலேம் பொதுச்சங்கம்
(3) இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் (4) நிசேயா பொதுச்சங்கம்
(5) திருச்சபை மாநாடு

**50.** 20ஆம் நூற்றாண்டளவில் இயேசு கிறிஸ்துவே 'முழுமுதல் அருளடையாளம்' என்னும் சிந்தனையை முன்வைத்தவர்
(1) காள்பெக்ஸ் (2) தூய லொயோலா இஞ்ஞாசியார்
(3) தூய சிப்ரியன் (4) ஒத்தோ செமெல்றோன்
(5) எட்வட் ஸ்கிலபெக்ஸ்

* * *

AL/2014/43/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் இருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இல் இருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) பாவத்தின் விளைவாக சமத்துவ நிலை முறிவடைந்த விதத்தினை **நான்கு** காரணிகள் மூலம் எடுத்துக்காட்டுக.
   (ii) உண்மை இறைவாக்கினர் ஒருவரை இனங்காண்பதற்கான அளவுகோல்கள் **நான்கும்** எவை ?
   (iii) தூய மாற்கு தனது நற்செய்தியை எழுதியதன் நோக்கங்கள் **நான்கினை** எழுதுக.
   (iv) திருச்சபையின் ஆரம்ப காலம் பற்றி அறிந்துகொள்ள உதவும் மூலங்கள் **நான்கும்** எவை ?
   (v) 13ஆம் நூற்றாண்டில் உலகில் காணப்பட்ட முக்கிய பல்கலைக்கழகங்கள் **நான்கினதும் பெயர்களை** எழுதுக.
   (04 × 5 = 20 புள்ளிகள்)

2. (i) 5ஆம் நூற்றாண்டில் திருச்சபை முகங்கொடுத்த சவால்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (ii) இறைவன் வாக்குப்பண்ணிய மெசியா, இயேசு என்பதை எடுத்துக்காட்ட தூய மத்தேயு தமது நற்செய்திக்கு அடிப்படையாகக் கொண்ட **நான்கு** விடயங்களும் எவை ?
   (iii) தூய மாற்குவின் நற்செய்தியின்படி கிறிஸ்துவின் பாடுகளைப் பிரித்துக்காட்டும் **நான்கு** வடிவமைப்புகளும் எவை ?
   (iv) யோவான் நற்செய்தியை எழுதும்போது பயன்படுத்திய மூலங்கள் தொடர்பாக வேதாகம அறிஞர்கள் முன்வைத்துள்ள மறைக் கருத்துகள் **நான்கினையும்** சுருக்கமாக விளக்குக.
   (v) மோசயிக் சித்திரக்கலையின் பண்புகள் **நான்கினைப்** பெயரிடுக.
   (04 × 5 = 20 புள்ளிகள்)

3. (i) தொடக்க நூலின்படி, பாவம் பரவுதலை உதாரணங்கள் **நான்கின்** மூலம் எடுத்துக்காட்டுக.
   (ii) பழைய உடன்படிக்கையில் பாஸ்கா பொது வழிபாட்டில் நிகழ்ந்த அம்சங்களின் கருத்துகள் **நான்கு** எழுதுக.
   (iii) எழுத்து மரபில் அமையப்பெற்ற புதிய உடன்படிக்கையின் 'நற்செய்தி' என்ற சொல்லின் பொருளை **நான்கு** காரணிகள் மூலம் குறிப்பிடுக.
   (iv) சிங்கள அரசர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் போர்த்துக்கேயரின் ஆட்சி விருப்பற்றுப் போனமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக.
   (v) இலங்கையில் கிறிஸ்தவ சமூக நலன்புரி நிறுவனங்கள் **நான்கின்** பெயர்களைத் தருக.
   (04 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) செங்கடலைக் கடத்தல் தொடர்பாக நிலவும் பல்வேறு கருத்துகளை **ஐந்து** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (10 புள்ளிகள்)
   (ii) ஈசாக்கைப் பலியிடச் சென்ற நிகழ்வின் வழியாக, உமது வாழ்விற்குக் கிடைக்கும் செய்தியினை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) உண்மையாகவே துன்புறும் ஊழியன் யார் என்பது பற்றி **ஐந்து** விடயங்களின் துணையுடன் விவரிக்குக. (10 புள்ளிகள்)
   (ii) தேசிய கிறிஸ்தவ இசையின் அபிவிருத்திக்கு அதி வணக்கத்துக்குரிய யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் பங்களிப்பைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**6.** (i) தூய பவுல் I கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் குறிப்பிடும் தூய ஆவியின் செயற்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) "இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்தல் கிறிஸ்தவ அடையாளமாகும்." தூய ஆவியின் அபிஷேகம் பெற்ற இளம் கிறிஸ்தவனாக நீர் இதற்கு எவ்வாறு சான்று பகர்வீர் எனச் சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் வெளியீடுகளில், திருவழிபாடு பற்றிய கொள்கைத்திரட்டின் படிப்பினைகளை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) மனிதனின் மாண்பையும் அந்த மாண்பினைப் பேணும் முறையையும் பற்றி இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் 'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் கொள்கைத்திரட்டு எடுத்துக்கூறும் விடயங்கள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) எல்லா அருளடையாளங்களும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளமையை **ஐந்து** காரணிகளின் துணையுடன் உறுதிப்படுத்துக. (10 புள்ளிகள்)

(ii) மேலான திருவழிபாட்டுச் செயலாகிய திருப்பலியில் கருத்துள்ள விதத்தில் பங்குபற்றும் ஒருவர் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

* * *

The National e-Learning Portal for The General Education